(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.205/2025**

1. Deposition of Prosecution/Defence/Court Witness for PW. 5 (LW. 13)

| | | |
|---|---|---|
| Name | : | ராதா |
| Father's Name | : | சுப்ரமணியம் |
| Village | : | பரமத்தி |
| Taluk | : | பரமத்தி |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 47 |

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 24.06.2026

**முதல் விசாரணை:–**

1) நான் தற்பொழுது திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் ஆய்வாளர் சிவகுமார் அவர்கள் தற்போது பணிமாறுதல் ஆகி தேனி மாவட்டம் வீரபாண்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதால் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காகவும் நானே சாட்சிமளிக்கிறேன். கடந்த 16.08.2024 ம் தேதி மல்லசமுத்திரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரஞ்சித்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது சதீஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின்பேரில் நிலைய குற்ற எண்.130/2024 ச.பி.281, 106(1) BNS –ன் கீழ் ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் (பொறுப்பு) சிவகுமார் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை அவரது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.08.2024 ம் தேதி

காலை 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, சாட்சிகள் சபாபதி மற்றும் முத்துசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சதீஷ், ராஜ்குமார், கார்த்திக், சபாபதி, முத்துசாமி, சங்கர் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

2) பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன கந்தசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வழக்கில் இறந்துபோன கந்தசாமி என்பவரின் உடலின்மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 52 K 6970 Honda Shine வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்கு வேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்துள்ளார்.

3) இவ்வழக்கில் இறந்துபோன கந்தசாமி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய தலைமைக்காவலர் திரு.நித்யானந்தன் என்பவர் மூலம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் அவரது புலன்விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் எதிரியான பாலசுப்ரமணி என்வரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர் மேற்படி மோட்டார் வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN 52 K 6970 Honda Shine வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பின்னர் பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர் கோகுல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த தலைமைக்காவலர் திரு.நித்யானந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர்

எனது புலன் விசாரணை முடித்து எதிரிமீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.–**

சம்பவம் நடந்தது 16.08.2024 –ம் தேதி என்றால் சரிதான். ஒரு நாள் காலதாமதமாக 17.08.2024–ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்கள் இறந்துபோன கந்தசாமியின் ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் உள்ள கடையில் இருந்த நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரின் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும், இறுதியறிக்கையிலும் இறந்துபோன கந்தசாமி ரோட்டை கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின்பேரில் நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக பொய்யாக இறுதியறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.24 20:43:44 +0530